**செய்தி வெளியீடு எண்: 030** **நாள்: 08.01.2018**

**செய்தி வெளியீடு**

# இயல்-இசை-மியூசியம்

**பாரம்பரியம் ஒரு பார்வை**

**இயல்-இசை-மியூசியம் என்ற தலைப்பில் சென்னை அரசு அருங்காட்சியகம் வரும் ஜனவரி 11 முதல் ஃபிப்ரவரி 12 வரை இசை மற்றும் நாட்டிய கண்காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.**

- முதல் முறையாக அருங்காட்சியத்தின் அரிய பொக்கிஷங்களான இசைக் கருவிகள் மற்றும் நாட்டிய சிற்பங்கள் கண்காட்சியாக உங்கள் பார்வைக்கு வருகின்றன.
- 11.01.2018 அன்று காலை **09.00** மணிக்கு, சென்னை அரசு அருங்காட்சியக இரண்டாவது கட்டடம், தரைத்தளத்தில் திரு K. பாண்டியராஜன், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட உள்ளது.
- வெறும் பார்வையிடலோடு முடிந்து விடாமல், கேட்டும், உணர்ந்தும் பரவசம் அடையும் வகையில், சங்க காலம் தொட்டு இன்று வரை உள்ள பழமையான இசைக் கருவிகளும், சிற்பங்களும் கண்காட்சியில் இடம்பெறுகின்றன.
- பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கான ஓவியப் போட்டி, கட்டுரைப்போட்டி, பாடல் மற்றும் ஆடல் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளன.
- ஆர்வலர்கள் ஆவலைப் பூர்த்தி செய்ய இசை மற்றும் நாட்டியம் மீதான விரிவுரைகளும் உண்டு.

சென்னை அரசு அருங்காட்சியகம், வரும் ஜனவரி 11 முதல் ஃபிப்ரவரி 11 வரை இயல்-இசை-மியூசியம் என்ற பெயரில் கண்காட்சி ஒன்றை நடத்த இருக்கிறது. சங்க கால இசைக் கருவிகளான மயூர யாழ், குடமுழா, முகவீணை, கின்னரி, முதல், வட இந்தியாவின் ஹிந்துஸ்தானி சங்கீத இசைக் கருவிகளான மயூர், எஸ்ராஜ், கஷ்டதரங் முதலிய அரிய இசைக் கருவிகளைக் கண்டு, உணர்ந்து மகிழலாம். அவற்றுடன், மிகப் பழமையான நடன சிற்பங்களும் பார்வைக்கு வைக்கப்படும்.

இறுதி நாட்களான ஃபிப்ரவரி 11 மற்றும் 12 ஆகிய இரு தினங்களிலும் வல்லுனர்களின் செயல்விளக்க விரிவுரைகள் நடத்தப்பட உள்ளன.

ஒரு மாத காலத்திற்கு கீழ்க்காணும் போட்டிகள் நடைபெறும்:

1. பள்ளி/ கல்லூரி மாணவர்க ள்/பொது மக்களுக்கான ஓவியப் போட்டிகள்
2. பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகள்
3. பள்ளி/ கல்லூரி மாணவர்களுக்கான/ தனி/ குழு பாடல் போட்டிகள்
4. பள்ளி/ கல்லூரி மாணவர்கள்/ தனியார் நடனக் குழுக்களுக்கான குழு நடனப் போட்டிகள்

அதிக தகவலுக்கு அணுகவும்:

இயக்குனர், சென்னை அரசு அருங்காட்சியகம்.

தொலைபேசி: 9444116940

044-28193778

மின்னஞ்சல்:: tnmusuemsdept@gmail.com

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**